பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

23 04 2025 WEDNESDAY 6.30 PM

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- பாதுகாப்பு விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக்குழு கூட்டம் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் தற்போது புதுதில்லியில் கூடி பஹல்காம் தீவிரவாத தாக்குதல் சம்பவம் குறித்து விவாதித்து வருகிறது.

- ஒரே நாடு - ஒரே தேர்தல் நடைமுறை காலத்தின் கடடாயம் என்று மத்திய அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

- புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கில் மாவட்டந்தோறும் புத்தகக் காட்சிகளும், இலக்கியத் திருவிழாக்களும் நடத்தப்படுவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

- சட்ட விரோத பணப்பரிவர்த்தனை வழக்கில் ஜாமின் பெற்றுள்ள மாநில அமைச்சர் திரு செந்தில் பாலாஜி, அமைச்சர் பதவியா, ஜாமினா என்பதை முடிவு செய்ய வேண்டும் என்று உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

- ஃபெடரேசன் கோப்பைக்கான தேசிய தடகள சாம்பியன் போட்டியில் தமிழகத்தின் வித்யா ராம்ராஜ் தங்கப்பதக்கம் வென்றார்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<<>>>>>

பாதுகாப்பு விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக்குழு கூட்டம் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் தற்போது புதுதில்லியில் நடைபெற்று வருகிறது.

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் நடைபெற்ற தீவிரவாத தாக்குதல் சம்பவம் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முன்னதாக, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மற்றும் பாதுகாப்புத்துறை உயரதிகாரிகளுடன் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

தீவிரவாத தாக்குதல் சம்பவம் குறித்தும், தற்போது நிலவிவரும் சூழல் குறித்தும் இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

இதற்கிடையே, பஹல்காமில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்திய பகுதியில், மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று ஆய்வு மேற்கொண்டார்.

தேசிய புலனாய்வு அமைப்பும் அப்பகுதியில் முகாமிட்டு, இதுதொடர்பாக, தீவிர விசாரணை மேற்கொண்டு வருகிறது.

<<<<<<<>>>>>

ஒரே நாடு - ஒரே தேர்தல் நடைமுறை காலத்தின் கடடாயம் என்று மத்திய அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இதுதொடர்பாக மாணவர்கள் பங்கேற்ற மாநாட்டில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

அடிக்கடி தேர்தல் நடைபெறுவதால் நேரம் விரையமாவதோடு, செலவினங்களும் அதிகரிப்பதாக அவர் கூறினார்.

இது வளர்ச்சிக்கு தடையாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா, வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்கினை எட்ட இளையோர் கூடுதலாக பங்களிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ஒரு லட்சம் இளையோர் தலைவராக உருவெடுக்க வேண்டும் என்ற பிரதமரின் எண்ணத்தை நிறைவேற்ற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இதுபோன்ற மாநாடு வரலாற்று சிறப்புமிக்கது என்றும் திரு மன்சுக் மாண்டவியா கூறினார்.

<<<<<<<>>>>>

துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் மசூர் பருப்பை கொள்முதல் செய்வதற்கான திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

பருப்பு வகைகளின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக வேளாண்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன்படி, மாநிலங்களில் உற்பத்தி செய்யப்படும் பருப்பு வகைகள் விலை ஆதரவுடன் 100 சதவீதம் கொள்முதல் செய்யப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கில் மாவட்டந்தோறும் புத்தகக் காட்சிகளும், இலக்கியத் திருவிழாக்களும் நடத்தப்படுவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

சர்வதேச புத்தக தினத்தையொட்டி, சமூக வலைதளத்தில் விடுத்துள்ள செய்தியில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

சென்னை, மதுரையைத் தொடர்ந்து கோவை மற்றும் திருச்சியிலும் மாபெரும் நூலகங்கள் அமைக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

புதிய உலகிற்கான திறவுகோல்களாக புத்தகங்கள் திகழ்வதாகவும், திரு மு.க.ஸ்டாலின் அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>

தமிழகத்தின் மொத்த வருவாயில் 87 சதவீதத்தை பெற்றுத்தரும் துறைகளாக வணிக வரி மற்றும் பதிவுத்துறை உள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு மூர்த்தி கூறியுள்ளார்.

இன்று சட்டப்பேரவையில தமது துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து அவர் பேசினார்.

கடந்த நான்காண்டுகளில் 5 லட்சத்து 8 ஆயிரம் கோடி ரூபாய் வருவாயை வணிகவரித்துறை ஈட்டியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பதிவுத்துறையை பொறுத்தவரை 72 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு வருவாய் ஈட்டப்பட்டிருப்பதாகவும் திரு மூர்த்தி கூறினார்.

<<<<<<<>>>>>

சைவ, வைணவ சமயங்களையும், பெண்களையும் இழிவுபடுத்தும் வகையில் பேசிய மாநில அமைச்சர் திரு பொன்முடிக்கு எதிராக தாமாக முன்வந்து வழக்கை விசாரணைக்கு எடுக்க பதிவாளருக்கு, சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீதிபதி திரு ஆனந்த் வெங்கடேஷ் இன்று இதற்கான உத்தரவை பிறப்பித்தார்.

திரு பொன்முடியின் பேச்சு, வெறுப்பு பேச்சின் வரம்புக்குள் வருவதாகவும், இதனை ஒருபோதும் சகித்துக்கொள்ள முடியாது என்றும் நீதிபதி தெரிவித்தார்

<<<<<<<>>>>>

சட்ட விரோத பணப்பரிவர்த்தனை வழக்கில் ஜாமின் பெற்றுள்ள மாநில அமைச்சர் திரு செந்தில் பாலாஜி, அமைச்சர் பதவியா, ஜாமினா என்பதை முடிவு செய்ய வேண்டும் என்று உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

திரு செந்தில்பாலாஜிக்கு வழங்கப்பட்ட ஜாமினை ரத்து செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணை செய்த நீதிபதிகள் திரு Abhay S Oka திரு Ag Masih அமர்வு இன்று இக்கருத்தை தெரிவித்தது.

இதுகுறித்து வரும் திங்கட்கிழமைக்குள் முடிவெடுக்குமாறு நீதிபதிகள் அறிவுறுத்தினர்.

<<<<<<<>>>>>

டாஸ்மாக் மீதான சோதனையை அமலாக்கத்துறை தொடர்ந்து மேற்கொள்ளலாம் என்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது வரவேற்கத்தக்கது என்று பிஜேபி தெரிவித்துள்ளது.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அக்கட்சியின் மாநில துணைத்தலைவர் திரு நாரயாணன், இதுதொடர்பான விசாரணையை அமலாக்கத்துறை விரைவுப்படுத்தி, குற்றவாளிகளையும், ஊழல் புரிந்தவர்களையும் கடுமையாக தண்டிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

மாநில அமைச்சர் திரு செந்தில் பாலாஜியை, அமைச்சரவையிலிருந்து நீக்கவும் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு நாராயணன் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<<>>>>>

சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப்பிரிவு வழங்கும் செய்திச்சுடர் நிகழ்ச்சியில், இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் திரு த வி வெங்கடேஷ்வரனுடன், எமது நெறியாளர் சுமித்ரா ரத்னம் பங்கேற்ற நேர்காணல் இன்றிரவு மணி 9.15-க்கு ஒலிபரப்பாகிறது.

ஒருங்கிணைந்த அலைவரிசையில் ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

<<<<<<<>>>>>

தமிழகத்தில் கோடை வெயிலின் தாக்கம் அடுத்த இரு தினங்களுக்கு அதிகரித்தே காணப்படும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 30 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

தூத்துக்குடி மாவட்டத்தில் 12-ஆம் வகுப்பு முடித்த மாணவர்களின் உயர்கல்விக்கான ஆலோசனைகளை வழங்குவதற்கென சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுவதாக ஆட்சியர் திரு இளம்பகவத் கூறியுள்ளார்.

--------------------

நாமக்கல் மாவட்டம் நாமகிரிபேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை ஆட்சியர் திருமதி உமா இன்று ஆய்வு செய்தார்.

-------------------

திருப்பத்தூர் மாவட்டத்தில காவல்துறை சார்பில் பொதுமக்கள் குறைதீர் கூட்டம் காவல்துறை கண்காணிப்பாளர் திருமதி ஸ்ரேயா குப்தா தலைமையில் இன்று நடைபெற்றது.

---------------

நெல்லை மாவட்டம் திருக்குறுங்குடி வனச்சரகத்தில் வரையாடுகள் கணக்கெடுக்கும் பணி நாளை தொடங்கி, வரும் 28-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளதால் நம்பிக்கோவில் சோதனைச்சாவடி தற்காலிகமாக மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

--------------------

மயிலாடுதுறை மாவட்டம் திருக்காட்டுப்பள்ளியில் அமைந்துள்ள கோலவில்லிராமர் கோவில் கும்பாபிஷேகம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

----------

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டியில் உள்ள பிறவிமருந்தீஸ்வரர் கோவில் சித்திரைத் திருவிழா கொடியேற்றத்துடன் இன்று தொடங்கியது.

**<<<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

ஃபெடரேசன் கோப்பைக்கான தேசிய தடகள சாம்பியன் போட்டியில் தமிழகத்தின் வித்யா ராம்ராஜ் தங்கப்பதக்கம் வென்றார்.

கொச்சியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 400 மீட்டர் தடை ஓட்டத்தில் அவர் தங்கப்பதக்கத்தையும், அஷ்வினி வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

-----------

ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Rudraksh Singh Khaidem அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஜோர்டானின் அம்மானில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 46 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், கிர்கிஸ்தானின் Aidar Musaev-ஐ வென்றார்.

37 கிலோ எடைப்பிரிவில் Harshil-லும், 49 கிலோ எடைப்பிரிவில் Sanchit Jayani -யும், 35 கிலோ எடைப்பிரிவில் Sanskar Vinod Astram –மும் 40 கிலோ எடைப்பிரிவில் Prikshit Balahra-வும் காலிறுதி ஆட்டங்களில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் 43 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் Milky Meinam–மும், கஜகஸ்தானின் Yeldana Abdigani-ஐ வென்று, அரையிறுதிக்கு முன்னேறினார்.

-------------

புனேயில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் கிராண்ட் பிரி செஸ் போட்டியின் எட்டாவது சுற்று முடிவில், இந்தியாவின் Koneru Humpy ஆறு புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

<<<<<<<END>>>>>